சூலூரில் சுற்றுலா இல்லம்

*232. வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூரில் சுற்றுலா இல்லம் ஒன்று கட்ட சூலூர் ஊராட்சியின் மூலம் அரசாங்கத்தின் கவனத்திற்கு விண்ணப்பம் வந்துள்ளதா?

(இ) ஆம் என்றால், அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, may I know on what basis the tourist bungalows are put up? Are they built in centres of pilgrimage or centres of other attractions? Have they any basis for putting up such tourist bungalows?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, சுற்றுலா மாளிகைகள், மக்களைக் கவரத் தகுந்த இடங்களில் கட்டப்படுகின்றன. உதாரணமாக, கோயில்கள் இருக்கும் இடங்கள், மலைவாசஸ்தலங்கள், நீர்வீழ்ச்சியுள்ள இடங்கள் போன்றவற்றில் கட்டப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்லாமல் மாவட்டத் தலைநகரங்களிலும் கட்டலாமா என்ற எண்ணம் ஆலோசனையில் இருந்து வருகிறது.

திரு. எம். தேவராசன்: தலைவரவர்களே, சில முக்கியமான சுற்றுலா இடங்களில் உள்ள அந்த சுற்றுலா மாளிகைகளில் அநேகமாக இடம் கிடைப்பதில்லை. இதற்காக அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, சுற்றுலா மாளிகைகளில் ஓரளவுக்குத்தான் இடம் கொடுக்கமுடிகிறது. இப்பொழுது கூட உதகமண்டலத்தில் 100 பேர்கள் தங்கக் கூடிய அளவிற்கு கட்டப்பட்டு வருகிறது. அந்த அளவிற்கு எவ்வளவு பயணிகள் அந்த இடங்களுக்கு வருகிறார்கள் என்று பார்த்து அவர்களது வசதிகளைக் கவனிக்கத் தக்க அளவிற்கு சுற்றுலா வாரியம் ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, in these tourist bungalows, will the M.L.As. and M.Ps. be given priority whenever they go and want to occupy?

1972 ஆகஸ்ட் 21]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, இது நாட்டிற்கு வருகின்ற பயணிகளுக்குத்தான். எம்.எல்.ஏ.க்கள் அநேகமாக பயணம் போவதில்லை என்று கருதுகிறேன்.

புதிய பேருந்து வழித்தடங்கள்

*233. வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971-72-ம் ஆண்டில் எந்தெந்த புதிய ரூட்டுகளில் புதிதாக பஸ்கள் விடப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : விடை @ பேரவை முன் வைக்கப் பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, 1972-73-ம் ஆண்டில் புதிதாக விடப்பட்டு வரும் பஸ் ரூட்டுகளை அறிவிக்க இயலுமா? மாயவரம் தொகுதி மக்களின் சார்பாகவும், தஞ்சை மாவட்டத்து மக்களின் சார்பாகவும் அடிக்கடி மாயவரத்திலிருந்து பஸ்கள் விடப்பட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர வர்களிடத்தில் சொன்னபோதெல்லாம், பெரும்பாலும் கடலூரிலிருந்து பழனி, கடலூரிலிருந்து மதுரை என்று இப்படித்தான் விட்டுக்கொண்டு வருகிறார்கள். எனவே மாயவரத்தை ஒரு முக்கிய ஊராகக் கருதி, அது ஃபர்ஸ்ட் கிரேட் ஊர் என்ற அடிப்படையிலாவது அங்கே டெப்போ ஏற்படுத்தி அங்கிருந்து பஸ்கள் விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, 1971-72-ம் ஆண் டில் புதிதாக விடப்பட்ட பேருந்துகளின் பட்டியல் இங்கு தரப்பட்டிருக்கிறது. 1972-73-ம் ஆண்டைப் பொறுத்தவரையில் இனிமேல்தான் அவைகளையெல்லாம் தருவதற்கு ஏதுவாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாயவரத் திலிருந்து பல்வேறு இடங்களுக்கு விரைவுப் பேருந்துகள் விடப்பட வேண்டு மென்று கேட்கிறார்கள். நல்லவேளையாக அவர் பன்ருட்டியிலிருந்து கோயம் புத்தூர், பன்ருட்டியிலிருந்து மற்ற இடங்களுக்கு என்று சொல்லாமல் விட்டது பாராட்டத் தக்கது. ஆனால் புதிய பஸ்கள், தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள் அவைகளுக்கு இடையிலே உள்ள போக்குவரத்தைக் கணக்கிட்டு அதன்மூலம் புதிய வழித்தடங்களில் அரசாங்கப் போக்குவரத்தை மேற்கொள்கிறோம். உறுப்பினரவர்கள் ஏற்கனவே தெரிவித்த யோசனையை அரசாங்கம் பரிசீலிக்கும்.

@ 498-449-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.